பக்கங்கள்: 10

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 11 சனிக்கிழமை 27.08.2022 கதிர் 294

### இனி இது ரகசியம் அல்ல!

ஒன்பது மாகாணங்களுக்கும் ஆளுநர்கள் மாற்றம் அடுத்த மாதம் முற்பகுதியில் நிச்சயம் என்கின்றன அரச வட்டாரங்கள்.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தேர்வு செய்யப்படக்கூடிய தகுதியான நபர்களின் பட்டியல் ☞ 2

# ரஞ்சன் விடுதலை!

## சஜித் அணியினர் அமோக வரவேற்பு



நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க ஜனாதிபதியின் பொதுமன்னிப்பில் நேற்று விடுதலை செய்யப்பட்டார். ☞ 2

## ரஞ்சனுக்கு நிபந்தனையுடன் ஜனாதிபதி பொது மன்னிப்பு

### ரணிலின் ஊடகப் பிரிவு விளக்கம்



வரும் காலத்தில், நீதித்துறையை விமர்சிக்கும் வகையில் எந்தவொரு கருத்தைத் தெரிவிக்கவோ செயற்படவோ கூடாது என்ற நிபந்தனையுடன் பொது மன்னிப்பு வழங்க ஜனாதிபதி ☞ 2

## நில்வள கங்கையில் மூழ்கி நால்வர் மாயம்!

பிட்டபெத்தர பகுதியில் நில்வள கங்கையில் நீராடச் சென்றவர்களில் நால்வர் நீரில் இழுத்துச் செல்லப்பட்டுக் காணாமல்போயுள்ளனர்.

நேற்று மாலை, நில்வள கங்கையில் ஒரு குழுவினர் நீராடச் சென்றுள்ளனர்.

இதன்போது, நால்வர் நீரில் இழுத்துச் செல்லப்பட்டுக் காணாமல்போயுள்ளனர்.

இந்தநிலையில், காணாமல்போனவர்களை மீட்கும் பணிகளைப் பிரதேசவாசிகளுடன் இணைந்து பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# மக்களிடமிருந்து என்னை பிரித்தெடுக்கவே முடியாது

## விடுதலையான ரஞ்சன் சூளுரை

மக்களிடமிருந்து என்னை எவரும் பிரித்தெடுக்கவே முடியாது. நான் எப்போதும் மக்கள் பக்கமே நிற்பேன். எனது விடுதலைக்காகப் பாடுபட்ட அனைவருக்கும் நன்றி.

- இவ்வாறு முன்னாள் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார். ☞ 2



## கட்சி மாறுவாரா ரஞ்சன்? இல்லை என்கிறார் அவர்



நான் கட்சி மாற மாட்டேன் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார்.

நீதிமன்றத்தை அவமதித்தார் என்று குற்றம் சாட்டப்பட்டு தண்டனை அனுபவித்து வந்த ரஞ்சன் ராமநாயக்க, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ☞ 2

## ரஞ்சனுக்குத் தேசியப்பட்டியல் எம்.பி. பதவி

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் உறுதி



ரஞ்சன் ராமநாயக்கவைத் தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் கொண்டு வருவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயார். கிடைக்கும் முதல் வாய்ப்பிலேயே ரஞ்சனுக்கு அந்த வாய்ப்பு வழங்கப்படும்.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். ☞ 2

## சந்நிதியானுக்கு இன்று கொடியேற்றம்



வரலாற்றுப் புகழ்பெற்ற யாழ். வடமராட்சி - தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று பிற்பகல் 2 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

செப்டெம்பர் 8 ஆம் திகதி சப்பரத் ☞ 2

## மட்டக்களப்பில் இளைஞர் கத்தியால் குத்திக்கொலை

### ஆலயத்துக்குள் கொடூரம்

மட்டக்களப்பு - வாகனேரியிலுள்ள ஆலயம் ஒன்றில் இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த ஆலயத்தில் நடைபெறும் வருடாந்த உற்சவத்தில் இடம்பெற்ற சம்பிரதாயங்களின்போது, இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட ☞ 2

## சர்வதேச நாணய நிதியத்துடன் ரணில் புதன்கிழமை மூன்றாம் சுற்றுப் பேச்சு!



இலங்கையில் தற்போது நிலவும் நிதி நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கும் இடையில் இரண்டாம் சுற்றுப் பேச்சு நேற்றுப் பிற்பகல் நடைபெற்றது.

ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 'சூம்' ☞ 2

## இனி இது........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தயார்படுத்தி வருகின்றார் என்றும் தகவல்.

வடக்கிற்கு மூன்று, நான்கு பெயர்கள் அடிபடுகின்றன. இருவர் ஐ.தே.கட்சி அரசியல் பிரமுகர்கள். அவர்கள் இருவரிடமும் ரணில் ஒரு விடயத்தை நேரில் தெரிவித்து விட்டார் என்று அறிய வந்தது. "நீங்கள் தேர்தல் அரசியலில் தொடர்ந்து இருக்க வேண்டியவர்கள். அத்தகையோரை ஆளுநராக்க முடியாது. எனவே அந்த எண்ணத்தைக் கைவிட்டு விடுங்கள்!" என்பதுதான் அது. அவர்களும் அந்த நிலைப்பாடு சரி என்று ஜனாதிபதி முன்னிலையில் ஒப்புக்கொண்டு விட்டனர் என்றும் தகவல்.

எது, எப்படி என்றாலும் வடக்கு எம்.பிக்களில் கணிசமானோரின் கருத்தை உள்வாங்கியே வடக்கு ஆளுநரை ஜனாதிபதி ரணில் நியமிப்பார் என்பது உறுதியான விடயம். அதை அவர் மிக நெருக்கமான தரப்புகளிடம் கூறியிருக்கிறார் என்பதையும் உறுதிப்படுத்த முடிந்தது.

ஜனாதிபதி தேர்வில் டலஸை ஆதரித்தோம் என்று வெளிப்படையாகக் கூறும் நமது எம்.பிக்கள் ஆளுநர் தேர்வில் யாரை விரும்புவாரோ ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்...!

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் வடக்கு எம்.பி. தான். அவரது தரப்பில் வடக்கில் இன்னொரு எம்.பியும் உள்ளார். டக்ளஸ் முன்னாள் சிவில் அதிகாரி ஒருவர் ஆளுநராக வருவதை விரும்புகிறார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரடியாக அதைத் தெரிவித்திருக்கின்றார் என்பதும் உறுதி. ஆனால் அந்நிய மனத்திற்கு வாய்ப்புகள் குறைவு.

கூட்டமைப்பின் வடக்கு எம்.பிக்கள் என்றால் சுமந்திரன், ஶ்ரீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன் தமிழரசுப் பக்கத்தில். செல்வம், வினோதராதலிங்கம், சித்தார்த்தன் இன்னொரு பக்கத்தில். ஒன்றுபட்டு முடிவெடுப்பார்களா அல்லது வேறுபட்டு பரிந்துரைகள் தருவார்களா என்பது இனித்தான் தெரியவரும்.

தவிரவும் நீதியரசர் விக்னேஸ்வரனின் கருத்தையும் இன்றைய நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிச்சயம் கோருவார் என எதிர்பார்க்கலாம்.

இது விடயத்தில் ஜனாதிபதி ரணில் அழைத்துக் கருத்துக் கேட்கும் ஊடாட்டத்தில் கஜேந்திரகுமார் - கஜேந்திரன் இணை இருக்கின்றதா என்பது தெரியவில்லை.

தவிரவும் வடக்கு மாகாணம் எனும் போது வன்னி மாவட்ட எம்.பியான மஸ்தான், அங்கஜன் போன்றவர்களும் உள்ளனர்.

ஒவ்வொருவரிடமும் ஜனாதிபதி பரிந்துரை கேட்கப் போவதில்லை. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ போன்றோரின் பரிந்துரையின் அடிப்படையில் சில பிரமுகர்களின் பெயர்களை வடக்குக்கெனத் தேர்ந்து வைத்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. அந்தப் பெயர்கள் தொடர்பில் தாம் முடிவு செய்ய முன்னர் வடக்கு எம்பிக்களின் கருத்தை ஜனாதிபதி கேட்டறிவார் எனத் தெரிகிறது.

2024 முற்பகுதியில் ஜனாதிபதித் தேர்தலை முற்கூட்டியே அறிவித்து, அதில் தாம் களமிறங்க விரும்பும் ரணில் விக்கிரமசிங்க, தேர்தலில் வடபகுதி மக்கள் தம்மையே ஆதரிப்பார்கள் என்று நம்புகின்றார். அதனால் தமது தலைமைத்துவத்திற்குக் கெட்ட பெயர் வேண்டித் தந்துவிடாத - வடக்கு மக்கள் பிரதிநிதிகளினதும் மக்களினதும் மனதை வெல்லக்கூடிய - தமிழர் ஒருவரையே ஆளுநராக நியமிக்க அவர் விரும்புகிறார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறுகின்றன.

மக்களையும் மக்கள் பிரதிநிதிகளையும் மட்டுமல்ல, அரசு அலுவலர்களையும் ஊழியர்களையும் ஊக்கப்படுத்தி, 'மோட்டிவேட்' பண்ணி, காரியங்களைச் சாதிக்க கூடிய ஆளுமை உள்ள ஒருவரே இன்று வடக்கிற்குத் தேவை. எல்லாத் தரப்பினரையும் சமாளித்துக் கையாளும் திறமையும் இருந்தால்தான் இன்றைய அரசியல் கட்டத்தில் ஏதேனும் சாதிக்க முடியும். அதுதான் யதார்த்தம்.

இப்போது இருப்பவர் பற்றிய சில விடயங்களை நாளை பார்ப்போம்.

- மின்னல் -

## சந்நிதியானுக்கு இன்று ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மறுநாள் 9 ஆம் காலை 9 மணிக்குத் தேர் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

செப்டெம்பர் 10 ஆம் திகதி காலை தீர்த்தத் திருவிழாவும், அன்று மாலை 6 மணிக்கு மௌனத் திருவிழாவும், மறுநாள் 11 ஆம் திகதி பூக்காரர் பூஜையும் நடைபெறவுள்ளது.

## ரஞ்சனுக்குத் தேசியப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் ரஞ்சன் ராமநாயக்கவுடன் நேற்று மாலை இணைந்து நடத்திய ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ரஞ்சன் ராமநாயக்கவுக்கு முழுமையான விடுதலை கிடைக்கவில்லை. எனவே, அவர் சுதந்திரமாக அரசியலில் ஈடுபடுவதற்கு முழுமையான சுதந்திரம் வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுக்கின்றேன் - என்றார்.

## சர்வதேச நாணய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொழில்நுட்பத்தின் ஊடாகக் கலந்துரையாடலில் இணைந்துகொண்டமையுடன், இரு தரப்பிலும் சாதகமான கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

மின் கட்டணத் திருத்தம் மற்றும் மதுவரிச் சட்டம் உள்ளிட்ட திறைசேரி தொடர்பான நேற்றைய கலந்துரையாடலில், தேவையான மேலதிக தகவல்களை வழங்குமாறு சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் முன்வைத்த கோரிக்கைக்கு இணங்க, எதிர்வரும் திங்கட்கிழமைக்குள் தகவல்களை வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிதி ஆலோசகர்கள், சட்ட ஆலோசகர்கள் நேற்றைய பேச்சில் கலந்துகொண்டமையுடன், எதிர்வரும் புதன்கிழமை மூன்றாம் சுற்றுப் பேச்சை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்தின் கலந்துரையாடல் சபையின் தலைவர் பீட்டர் ப்ரூயர், பிரதித் தலைவர் ஔைசரோ கொசைகோ, சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான நிரந்தரப் பிரதிநிதி டொபாகன்ஸ், ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, திறைசேரி செயலாளர் உட்பட மத்திய வங்கியின் சிரேஷ்ட அதிகாரிகள் இந்த கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

## மட்டக்களப்பில் இளைஞர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைகலப்பே உயிரிழப்புக்குக் காரணம் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரின் உடலில் கத்திக்குத்து காயம் காணப்படுகின்றது என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

வாகனேரி - குளத்தமடு பகுதியைச் சேர்ந்த 19 வயதான இளைஞரே மோதலில் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பிரேத பரிசோதனைக்காக சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கைகலப்பின்போது காயமடைந்த இருவர் வாழைச்சேனை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும், அவர்களைத் தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் பொலிஸார் மேலும் கூறினர்.

## கட்சி மாறுவாரா .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கிய நிபந்தனையுடனான பொது மன்னிப்பின் கீழ் நேற்று பிற்பகல் விடுதலை செய்யப்பட்டார்.

அதன்பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில் -

நிபந்தனை அடிப்படையிலேயே எனக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது. எனவே, சில விடயங்கள் தொடர்பில் கதைப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு கதைத்தால் மீண்டும் தண்டனை அனுபவிக்க வேண்டிவரும். எனக்கு உண்மை கதைத்துத்தான் பழக்கம். ஆனாலும், நிபந்தனை உள்ளது.

எனினும், பொது மன்னிப்பு வழங்கியதற்காக ஜனாதிபதிக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, பிரதம நீதியரசர், நீதிபதிகள், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உட்பட அனைவருக்கும் நன்றிகள். எனக்காகக் குரல் கொடுத்த மக்களுக்கும் நன்றி.

நான் மாறப்போவதில்லை. கட்சி மாறவும் மாட்டேன் - என்றார்.

## மக்களிடமிருந்து .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றத்தை அவமதித்தார் என்று குற்றம் சாட்டப்பட்டு தண்டனை அனுபவித்து வந்த ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கிய நிபந்தனையுடனான பொது மன்னிப்பின் கீழ் நேற்றுப் பிற்பகல் விடுதலை செய்யப்பட்டார். வெலிக்கடைச் சிறைச்சாலையில் இருந்து வெளியேறிய அவருக்குச் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி கட்சியினர் மற்றும் ஆதரவாளர்கள் அமோக வரவேற்பளித்தனர். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

என் வாழ்நாளில் இன்று மறக்க முடியாத நாள். எனது விடுதலைக்காகப் பாடுபட்ட அனைவருக்கும் நன்றி.

நான் எவருக்கும் பயந்து அடிமையாக இருக்கமாட்டேன். மக்களிடமிருந்து என்னை எவரும் பிரித்தெடுக்கவே முடியாது. நான் எப்போதும் மக்கள் பக்கமே நிற்பேன். நான் மீண்டும் அரசியலில் ஈடுபடுவேன். தேர்தலில் போட்டியிட்டு மீண்டும் மக்களுக்குச் சேவையாற்ற விரும்புகின்றேன்.

இந்த நாட்டின் அப்பாவி மக்களை வதைத்து - நாட்டைக் கொள்ளையடித்த வர்களுக்கு எதிராக எனது நடவடிக்கைகள் தொடரும் - என்றார்.

## ரஞ்சனுக்கு நிபந்தனை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

- இவ்வாறு முன்னாள் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க நேற்றுப் பிற்பகல் விடுதலை செய்யப்படுவதற்கு முன்பாக முற்பகல் வேளையில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

நீதிமன்றத்தை அவமதித்தார் என்று குற்றம் சாட்டப்பட்டு தண்டனை அனுபவித்து வரும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கும் ஆவணத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று (நேற்று) காலை கையெழுத்திட்டார்.

வரும் காலத்தில், நீதித்துறையை விமர்சிக்கும் வகையில் எந்தவொரு கருத்தைத் தெரிவிக்கவோ செயற்படவோ கூடாது என்ற நிபந்தனையுடன் பொது மன்னிப்பு வழங்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார்.

ரஞ்சன் ராமநாயக்கவை விடுதலை செய்வதற்குத் தேவையான பணிகளை முன்னெடுக்கும் பொறுப்பு நீதி அமைச்சின் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

2017 ஆகஸ்ட் 21 ஆம் திகதி அலரி மாளிகைக்கு வெளியே நீதித்துறையை அவமதிக்கும் வகையில் ரஞ்சன் ராமநாயக்க கருத்துத் தெரிவித்தமைக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் 2021 ஜனவரி 12 ஆம் திகதியன்று ரஞ்சன் ராமநாயக்கவுக்கு நான்கு ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. இந்தநிலையில், நீதிமன்றத்தை அவமதித்தமைக்காக மன்னிப்பு கோரி, ரஞ்சன் ராமநாயக்க சத்தியக் கடதாசியொன்றை நேற்று (நேற்றுமுன்தினம்) நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார்.

தான் தெரிவித்த கருத்துக்கள் முற்றிலும் பிழையானவை என்றும், அந்தக் கருத்துக்களால் பிரதம நீதியரசர் உள்ளிட்ட நீதித்துறையினர் அனைவருக்கும் அகௌரவம் ஏற்பட்டமைக்காக மன்னிப்புக் கோருகின்றார் என்றும் குறித்த சத்தியக் கடதாசி மூலம் தெரிவித்திருந்தார்.

தான் கூறிய கருத்துக்கள் முற்றிலும் பொய்யானவை என்றும், அவற்றை மீளப் பெறுகின்றார் என்றும், எதிர்காலத்தில் இவ்வாறான கருத்துக்களைத் தெரிவிக்கமாட்டேன் என்றும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க நீதிமன்றத்துக்குச் சமர்ப்பித்த சத்தியக்கடதாசியில் மேலும் குறிப்பிட்டுள்ளார் - என்றுள்ளது.

## ரஞ்சன் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரஞ்சன் ராமநாயக்கவுக்கு நிபந்தனையுடன் கூடிய பொது மன்னிப்பை வழங்கும் ஆவணத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் காலை கையொப்பமிட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து அந்த ஆவணம் சிறைச்சாலைகள் அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டதையடுத்து, நேற்றுப் பிற்பகல் அவர் வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார். அவரைச் சஜித் அணியினர் திரண்டு வரவேற்றனர்.



# தமிழர்களின் அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு தொடர்பாக சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளுடன் சாணக்கியன் பேச்சு!

உலக நாடுகளில் உள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து இலங்கையிலுள்ள தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு எவ்வாறான அழுத்தங்களை பிரயோகிக்க முடியும் என்பது தொடர்பாக இரா.சாணக்கியன் விசேட கவனம் செலுத்தியுள்ளார்.

கனடாவில் நடைபெற்ற கொமன்வெல்த் அமைப்பின் 65 ஆவது நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் 500 இற்கும் அதிகமான பல்வேறு நாடுகளையும் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது தமிழக சட்டப்பேரவையின் சபாநாயகர் எல்.ஏ அப்பாவுவை சந்தித்து தமிழ் நாட்டுக்கும் இலங்கைக்கும் இடையிலான அரசியல் விடயங்கள் தொடர்பாகத் தமிழக அரசாங்கம் வழங்கி வரும் உதவிகள் தொடர்பாகவும் இரா.சாணக்கியன் கலந்துரையாடினார்.

அத்துடன், சிலாங்கூர் மாநில சட்டமன்ற உறுப்பினர் டொக்டர் ஜி. குணராஜை சந்தித்த இரா.சாணக்கியன், மலேசியத் தமிழர்கள், இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையில் எவ்வாறு தலையிட முடியும் என்பது தொடர்பாகப் பேசியிருந்தார்.

இந்தச் சந்திப்புகள் தொடர்பாகக் கருத்து வெளியிட்ட இரா.சாணக்கியன், தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் உலகம் எங்கும் பரந்து வாழும் தமிழர்களுடைய பங்களிப்பையும், தமிழ் அரசியல்வாதிகளின் பங்களிப்பையும் எவ்வாறு பெற்றுக்கொள்ளவது என்பது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டது.

குறிப்பாக உலக நாடுகள் முழுவதிலும் தமிழ் அரசியல்வாதிகள் உள்ளனர். அவர்களை ஒருங்கிணைத்து எவ்வாறு இலங்கைத் தமிழர்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பது மற்றும் அரசியல் உரிமைகளைப் பெற்று



கொள்வதற்கு எவ்வாறு அழுத்தங்களைப் பிரயோகிப்பது என்பது தொடர்பாகவும் பேசியிருந்தேன்.

அத்துடன், எதிர்காலத்தில் எவ்வாறான திட்டங்களை வகுப்பது என்பது பற்றியும் அதிக கவனம் செலுத்தியிருந்தேன். – எனக் குறிப்பிட்டார்.

## முதல் 3 வாரங்களில் 30 ஆயிரத்துக்கும் அதிகமான சுற்றுலாப்பயணிகள் வருகை!

இந்த மாதத்தின் முதல் 3 வாரங்களில் 30 ஆயிரத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

சுற்றுலா மேம்பாட்டு பணியகம் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளது.

கடந்த முதலாம் திகதி முதல் கடந்த செவ்வாய்க்கிழமை வரையான காலப் பகுதியில், 31 ஆயிரத்து 105 நாட்டை வந்தடைந்துள்ளனர்.

இந்த வருடத்தின் கடந்த ஜனவரி மாதம் முதல் திகதி முதல் இதுவரையில் 4 லட்சத்து 89 ஆயிரத்து 775 சுற்றுலாப் பயணிகள் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

## நாட்டில் மீண்டும் எரிபொருள்களுக்குத் தட்டுப்பாடு பஸ் சேவையை 50 சதவீதமாக குறைக்க ஏற்பாடு!

முத்துராஜவெல பெற்றோலிய முனையத்திலிருந்து பெற்றோல், டீசல் விநியோகங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இலங்கை எரிபொருள் கூட்டுத்தாபனத்தின், தனியார் தாங்கிகள் உரிமையாளர் சங்கத்தின் இணை செயலாளர் டீ.வீ சாந்த சில்வா இதனைத் தெரிவித்துள்ளார்.

எனவே இன்று (வெள்ளிக்கிழமை) முதல் பஸ் சேவையை 50 சதவீதமாக குறைக்க வேண்டும் எனவும் இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

## இலங்கைக்குக் கடன் வழங்குநர்களின் கூட்டத்தை ஏற்பாடுசெய்ய ஜப்பான் தயார்

இலங்கையை அதன் மோசமான கடன் நெருக்கடியிலிருந்து மீட்பதை நோக்கமாகக் கொண்ட அனைத்து கடன் வழங்குநர்கள் கூட்டத்தை ஏற்பாடு செய்ய ஜப்பான் தயாராக உள்ளது.

இலங்கையின் நிதி பற்றிய தெளிவின்மை உள்ள நிலையில் அதில் இலங்கையின் முன்னணி கடன் வழங்குநரான சீனா இணையுமா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

2020 ஆம் ஆண்டின் இறுதியில் இருதரப்பு அடிப்படையில் இலங்கையின் கடன் 600 கோடியே 20 லட்சம் டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளதாக ரொயட்டர்ஸ் தெரிவித்துள்ளது.

இதனைத் தீர்ப்பதற்கான செயல்முறையை விரைவுபடுத்தும் பட்சத்தில் சீனாவுடனான அத்தகைய சந்திப்பிற்கு ஜப்பான் தலைமை தாங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடன்களை மறுசீரமைப்பது தொடர்பான பேச்சுக்கு பிரதான கடன் வழங்கும் நாடுகளுக்கு அழைப்பு விடுக்குமாறு ஜப்பானை இலங்கை கோரும் என முன்னதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

படுகொலை செய்யப்பட்ட முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேயின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ளும்போது அடுத்த மாதம் டோக்கியோவில் பிரதமர் புமியோ கிஷிடாவுடன் இந்த விவகாரம் தொடர்பில் விவாதிக்கவுள்ளார் என அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்தநிலையில் ஜப்பானிய தரப்புக்களின் இந்த முயற்சி தொடர்பில் ஜப்பானிய வெளிவிவகார அமைச்சு கருத்துத் தெரிவிக்க மறுத்துவிட்டது.

## பயண ஆலோசனையை இரத்து செய்தது நோர்வே அரசாங்கம்

இலங்கையின் பாதுகாப்பு நிலைமை தற்போது மிகவும் ஸ்திரமாக உள்ளதாக சுட்டிக்காட்டி முன்பு விதித்திருந்த பயண ஆலோசனையை நோர்வே அரசாங்கம் இரத்து செய்துள்ளது.

நாட்டின் பல பகுதிகளில் ஆர்ப்பாட்டங்கள், ஊரடங்கு உத்தரவு மற்றும் அவசரகால நிலை பிரகடனத்தை அடுத்து மே மாதம் பயண ஆலோசனை நோர்வே புதுப்பித்தது.

இந்நிலையில் இலங்கைக்கான பயண ஆலோசனையை இரத்து செய்துள்ள நோர்வே, பாதுகாப்பு நிலைமை ஓரளவு மேம்பட்டிருந்தாலும் எரிபொருள், மருந்து தட்டுப்பாடு நிலவுவதாக கூறியுள்ளது.

ஆகவே இலங்கைக்கு பயணிக்கத் திட்டமிடும் தமது நாட்டவர்களை தேவையான மருந்துகளை எடுத்துச் செல்லவும், போக்குவரத்து தொடர்பாக உறுதி செய்யுமாறும் கேட்டுக்கொண்டுள்ளது.



நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# அச்சுறுத்தல் பயன் தருமா?

இலங்கையின் தற்போதைய அரசியல் தலைவர்களில் அதிகம் தாராளவாத (லிபரல்) போக்குக் கொண்டவர் என்று மதிக்கப்படுபவர் ரணில் விக்கிரமசிங்க தான்.

அவர் ஜனாதிபதியாகத் தேர்வான போது தாராளவாத நடவடிக்கைகளை எடுப்பார் எனப் பல தரப்பினரும் – சர்வதேச சமூகத்தினரும் கூட – எதிர்பார்த்தனர்.

பொருளாதாரக் கொள்கைகள் போன்றவற்றில் அவரது தாராளவாதப் போக்குத் தென்படாமல் இல்லை.

ஆனால் ஜனநாயகம், மனித உரிமைகள், மக்களின் கருத்துச் சுதந்திரம் போன்றவற்றை மதித்துப் பேணுவதில் அவரின் தாராளவாதம் காணாமல் போய்விட்டது. பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு பின்னால் ஒளிக்கும் அவரது எதேச்சாதிகாரமே அதிகம் வெளிப்படுகின்றது.

அவருக்கு முன்பிருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இராணுவப் பாரம்பரியத்தில் வந்தவர். அவரால் மேற்கொள்ளப்பட்ட எதேச்சாதிகாரம் தெரிந்ததுதான்.

ஆனால் அவருடன் ஒப்பிடும்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடும்பிடி பிடிக்கின்றார். அவரது தாராளவாதம் இவ்விடயத்தில் காணாமல் போய்விட்டது. அடக்குமுறைப் போக்கே கொடிகட்டிப் பறக்கிறது.

அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. 'சோழியன் குடுமி சும்மா ஆடவில்லை' என்கின்றன விடயம் அறிந்த வட்டாரங்கள்.

பொருளாதார நெருக்கடி மக்களின் வயிற்றுப்பாட்டை மோசமாகப் பாதிக்கும் போது மக்கள் எப்படிக் கிளர்ந்தெழுவார்கள் என்ற படிப்பினையை ஜனாதிபதி கோட்டாபயவுக்கு பக்கத்தில் பிரதமராக இருந்து எதிர்கொண்டு கற்றவர் ரணில் விக்கிரமசிங்க.

அந்த எழுச்சியின் – கிளர்ச்சியின் – ஆக்ரோஷம் நிறைவேற்றதிகாரத்தைக் கையில் வைத்திருந்த கோட்டாபய ராஜபக்ஷவையே 'துண்டைக் காணோம், துணியைக் காணோம்' என்று நாட்டை விட்டுத் தப்பி ஓடி, நாடு நாடாக அலைய வைத்து விட்டது.

அந்த மக்கள் எழுச்சியின் ஆக்ரோஷம் தெரிந்த – புரிந்த – ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அத்தகைய நெருக்கடியைச் சமாளிப்பதற்காக இப்போதே அரண் கட்டுகின்றார் என்றே தோன்றுகின்றது.

ஜனாதிபதி கோட்டாபய கால நெருக்கடிகளின் தீவிரம் இப்போது குறைந்துள்ளது என்பது உண்மைதான். கியூ (வரிசை) யுகம் இல்லை. எரிபொருள், எரிவாயுப் பற்றாக்குறை தணிந்திருக்கின்றது. மக்கள் தற்காலிகமாகவேனும் மூச்சு விடும் சூழல் நிலவுகின்றது என்பது உண்மைதான்.

ஆனால் இவையெல்லாம் தற்காலிகமானவை. சூறாவளிக்கு முந்திய அதீத அமைதி. சர்வதேச நாணய நிதியம் பிணையெடுக்கும் சாத்தியம் அடுத்த ஆண்டு வரை சரிவரப் போவதில்லை என்கின்றன விடயம் அறிந்த வட்டாரங்கள்.

ஆகையினால் இந்த வருட முடிவுக்குள் நிலைமை மீண்டும் மோசமாவதற்கும் – விபரீதக் கட்டத்தை மீள அடைவதற்கும் – ஏது நிலைகள் அதிகம் தென்படுகின்றன.

அப்போது வெடிக்கக் கூடிய மக்கள் கிளர்ச்சியை – எழுச்சியை – கட்டுப்படுத்த இப்போதே அச்சுறுத்தியும் சட்டத்தை ஏவியும் பயங்காட்டி முற்கூட்டியே பாதுகாப்பு அரண் கட்டுகிறார் ஜனாதிபதி ரணிலார். ஆனால் 'ஆடிக் காற்றில் அம்மி குழவியே பறக்கும் நிலை' வந்தால், இந்த அச்சுறுத்தி அடக்கியாளும் தந்திரமும் அடிபட்டுல் பறந்து போய்விடும் என்பதை அவர் மறக்காமல் இருப்பது நல்லது.

# நாட்டில் மருந்துத் தட்டுப்பாடு படிப்படியாக குறைவடைந்தது

## கெஹலிய ரம்புக்வெல தகவல்



மருந்துகளை இறக்குமதி செய்யும் கொள்முதல் செயல்முறையை வினைத்திறனாக்குவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு 9 முதல் 11 மாதங்கள் வரையிலான கொள்முதல் நடவடிக்கைகள் தற்போது 3 முதல் 4 மாதங்களாகக் குறைக்கப்பட்டுள்ளன என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதிக வெளிப்படைத்தன்மையைப் பாதுகாப்பதன் மூலம் நோயாளிகளுக்கு தட்டுப்பாடு இன்றி தொடர்ச்சியாக மருந்துகளை வழங்குவதே இதன் முக்கிய நோக்கமாகும் என யு.என்.எச்.சி.ஆர். இன் பிரதிநிதிகள் குழுவுடனான சந்திப்பின் போது அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் மருந்து தட்டுப்பாடு படிப்படியாகக் குறைவடைந்துள்ளதாக சுட்டிக்காட்டிய அமைச்சர், எதிர்வரும் சில வாரங்களில் மேலும் குறைவடையும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், பற்றாக்குறையாக உள்ள மருந்துகளை உடனடியாக பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, அரசாங்கத்தின் மத்திய மருந்துக் களஞ்சியத்தில் கடந்த வாரம் முதல் 91 அத்தியாவசிய மருந்துகளின் கையிருப்பு தீர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித அலுத்கே இதனைத் தெரிவித்துள்ளார்.

எனினும் இது தொடர்பில் அதிகாரிகள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

# சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில் சர்வதேச விசாரணையை வலியுறுத்தி போராட்டம்!




சர்வதேச விசாரணையை வலியுறுத்தி சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில், புதுக்குடியிருப்பில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாபெரும் போராட்டத்தில் கலந்துகொள்ள அனைவருக்கும் பகிரங்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்க தலைவர் மரியசுரேஷ் ஈஸ்வரி மற்றும் செயலாளர் பிரபாகரன் ரஞ்சனா ஆகியோர் இந்த பகிரங்க அழைப்பை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டத்தின் இரண்டாயிரமாவது நாள்களின் நிறைவும் சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தினமுமான ஓகஸ்ட் 30ஆம் திகதி முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு வைத்திய சாலைக்கு முன்பாக மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த மாபெரும் கவனவீர்ப்பு போராட்டத்தில் கலந்துக்கொள்ள, மதகுருமார்கள், பல்கலைக்கழக மாணவர்கள், அரசியற் கட்சிகளின் பிரதிநிதிகள், பொது அமைப்புக்கள் என அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தங்களுடைய உறவுகளை தேடி 2009 ஆம் ஆண்டு முதல் முன்னெடுத்த போராட்டத்தில் தீர்வுகள் காணப்படாத நிலையில் கடந்த 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் எட்டாம் திகதி முதல் முல்லைதீவில் தொடர் கவனவீப்புப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

தமது உறவுகள் கிடைக்கும் வரை இந்தப் போராட்டம் தொடரும் என்ற அறிவிப்போடு ஆரம்பிக்கப்பட்ட இந்த போராட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி 2000 நாளை கடக்கின்றது.

# நிர்வாணமாக்கப்பட்ட போராளிகளின் படங்கள் எம்மூடாகவே வெளிவந்தன!

## இவை யுத்தக் குற்ற சாட்சியங்கள் என்கிறார் சிறிதரன்



நிர்வாணமாக்கப்பட்ட போராளிகளின் படங்கள் எம்மூடாகவே வெளியே போனது என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற படப்பிடிப்பாளர் தின நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது, அவர் மேலும் கூறுகையில் –

'பட பிடிப்பு என்பது சாதாரண விடய மல்ல. இங்கு ஓர் இனப்படுகொலை நடந்தது என்பதற்கு படங்களே சான்றுகளாகின.

இசைப்பிரியாவின் படம் வெளியான போது, அவருடன் அருகில் இருந்த மற்ற பெண்பிள்ளை தொடர்பில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டது. அதே பகுதியில் பலர் நிர்வாணமாக்கப்பட்டு கொலை செய்தமை யுத்த குற்றங்களுக்கான சாட்சியங்களாகின.

இவ்வாறான படங்கள் எங்கள் ஊடாகவே வெளிவந்தன. அவற்றை நாங்களே கொண்டு சேர்த்தோம். தளபதிகள், போராளிகள் நிர்வாணமாக்கப்பட்டும், கண்கள் கட்டப்பட்டும் கொலை செய்யப்பட்ட படங்கள் முக்கிய ஆவணங்கள் ஆகும். இவை உலகில் எந்த இடத்திலும் நடந்திராத இனப் படுகொலைக்கான முக்கிய ஆவணங்களாகும். – எனக் கூறினார்.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# விண்வெளி கண்காணிப்புக்கான ஆய்வகம் உத்தரகண்ட் மாநிலத்தில் உருவாகின்றது



பூமியைச் சுற்றி வரும் 10 செனி ம்ற்றர் அளவுள்ள சிறிய பொருள்களைக் கூடத் துல்லியமாக்க் கண்காணிக்கும் வல்லமையுடன் இந்தியாவின் முதல் வணிக விண்வெளி சூழ்நிலை விழிப்புணர்வு ஆய்வகம் விண்வெளித் துறை தொடக்க நிறுவனமான திகந்தாராவால் உத்தரகண்ட் மாநிலத்தின் கர்வால் பகுதியில் அமைக்கப்படுகிறது.

பிராந்தியத்தில் சுற்றும் விண்வெளி குப்பைகள் மற்றும் இராணுவ செயற்கைக்கோள்கள் உட்பட் விண்வெளியில் எந்த நடவடிக்கையையும் கண்காணிக்க இந்த விண்வெளி சூழ்நிலை விழிப்புணர்வு ஆய்வகம் உதவும்.

தற்போது, பல இடங்களில் உள்ள கண்காணிப்பு நிலையங்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் உலகம் முழுவதிலுமிருந்து வழங்கும்

கூடுதல் உள்ளீடுகளை மூலம் விண்வெளி குப்பைகளை கண்காணிப்பதில் அமெரிக்கா ஆதிக்கம் செலுத்துகிறது.

“ஆஸ்திரேலியாவிற்கும் தென்னாப்பிரிக்காவிற்கும் இடையில் இத்தகைய வசதிகள் இல்லாததால், உத்தரகாண்டில் அமையவுள்ள ஆய்வகம் பிராந்தியத்தில் சூழ்நிலை விழிப்புணர்வுக் கண்காணிப்புகளில் உள்ள முக்கியமான இடைவெளியை நிரப்பும் – என்று திகந்தராவின் தலைமை நிர்வாக அதிகாரி அனிருத் சர்மா பி.ர.ஐயிடம் இடம் தெரிவித்தார்.

உயர்தர அவதானிப்புகள் மற்றும் ஆய்வகத்தின் பங்குதாரரான தரை அடிப்படையிலான சென்சார் வலையமைப்புகள் ஆகியன சேர்ந்து, ஆழமான விண்வெளியில் நிகழும் நிகழ்வுகளைக் கண்காணிக்கும் ஆய்வகத்தின் திறனை – குறிப்பாக புவிநிலை, நடுத்தரப் புவி நிலை மற்றும் உயர் புவி நிலைசுற்றுப்பாதைகளில்நடப்பவற்றை அறியும் திறனை – மேம்படுத்த உதவும்

இந்தத் தரவு மூலம், செயற்கைக் கோள்கள் மற்றும் பிற விண்கலங்கள் அவற்றின் இருப்பிடம், வேகம் மற்றும் பாதை பற்றிய துல்லியமான கணிப்புகளைச் செய்வதன் மூலம் அவை மோதுவதற்கான சாத்தியக்கூறுகளைக் குறைக்க முடியும் என்று சர்மா கூறினார்.

இந்த ஆய்வகம், துணைக்கண்டத்தில் விண்வெளி நடவடிக்கைகளை கண்காணிக்க இந்தியாவிற்கு உள்நாட்டு திறன்களை வழங்கும் என்று கூறிய. அவர், உக்ரைனில் போருக்கு முன்னதாக, பல ரஷ்ய செயற்கைக்கோள்கள் பிராந்தி



யத்தில் வட்டமிடுவதைக் காண முடிந்தது என்றும் சொன்னார்.

உதாரணமாக, சீன செயற்கைக்கோள்கள் நீண்டகாலமாக இந்தியாவின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் காணப்பட்டால், அத்தகைய நடவடிக்கைகளை கண்காணிக்க, அமெரிக்கா போன்ற நாடுகளைச் சார்ந்திருக்காமல் உள்நாட்டு திறனை இந்தியா மேம்படுத்தி வைத்திருப்பது இந்தியாவுக்கு ஒரு ப்ளஸ் என்றும் சர்மா கூறினார்.

பல்வகைமைப் பொர்ருள்களின் தடங்களை காண்டறியும் (மல்டி – ஒப்ஜெக்ட் டிராக்கிங்) ரேடார்களைப் பயன்படுத்தி இந்தியா விண்வெளிப் பொரஒகளைக் கண்காணித்து வருவதாகவும், சூழ்நிலை விழிப்புணர்வு ஆய்வகம் இந்தத் துறையில் மிகப்பெரிய ஊக்கமாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

“திகந்தரா வான் காணகத்தை நிறுவுவதன் மூலம், பல்வேறு வகையிலான சுற்றுப்பாதையில் உள்ள செயற்கைக்கோள்கள் மற்றும் குப்பைகளை கண்காணிக்கும் பணியில் விண்வெளி அடிப்படையிலான சென்சார்களை கூடுதலாக வழங்க முடியும். இராணுவ மற்றும் சிவிலியன் விண்ணப்பங்களுக்குன் தேசத்திற்கும் என்று ஒரு நிறுவனத்தின் அறிக்கை கூறியது.

கீழ் மட்ட புவிச் சுற்றுப்பாதை மற்றும் ஏனய் புவி சுற்றுப்பாதை போன்ற அதிக நெரிசலான சுற்றுப் பாதைப் பகுதிகளில் மோதல் தவிர்ப்பு அமைப்புகளின் திறமையான தேவை அதிகரித்து வருகிறது.

புதிய ஆய்வகத்தின் சேர்க்கையானது திகந்தராவின் கண்காணிப்பு வசதிகளின் வலையமைப்பின் ஒரு பகுதியாக இருக்கும் என்பதோடு தற்போது திட்டமிடப்பட்டுள்ள விண்வெளி அடிப்படையிலான சென்சார்களின் தொகுப்புடன் இணைந்து செயல்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

“இது முன்பே நிலைத்து இருக்கும் விண்வெளி பொருட்களைக் கண்காணித்தல் மற்றும் அடையாளம் காண்பதன் செயல்திறனை மேம்படுத்தும். மேலும் விண்வெளித் துறையின் வணிக மற்றும் பாதுகாப்புத் துறைகளுக்கு சேவை செய்யும் ஒரு கலப்பின தரவு மையம் உருவாக்கப்படும் என்று சர்மா கூறினார்.

“உத்தரகண்ட் மாநிலத்தில் இந்தியாவின் முதல் பிரத்யேக விண்வெளி சூழ்நிலை விழிப்புணர்வு ஆய்வகங்களை நிறுவுவதில் திகந்தராவின் தொலைநோக்கு மற்றும் திட்டங்களை ஆதரிப்பதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம், என்று உத்தரகண்ட் அரசாங்கத்தின் தொழில்துறை இயக்குனர் சுதிர் நௌடியல் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

(மூலம்: என்.டி.ரி.வி.)

# சீன உளவுக் கப்பலின் முயற்சிகள் தோல்வி அந்தக் கப்பலை பாரதமே உளவு பார்த்தது!

## இந்திய ஊடகங்களில் தகவல்



சீன போர் கப்பலின் உளவு பணியை இந்திய செயற்கை கோள்கள் முறியடித்தன இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த சீன உளவுக் கப்பலால் இந்தியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் எனவும் முன்னர் தகவல் வெளியானது. இந்திய இராணுவம் தொடர்பான எந்தத் தகவலையும் சீன உளவு கப்பல் சேகரிக்க முடியாத நிலை ஏற்பட்டதாக இப்போது இந்திய ஊடகங்களில் தகவல் வெளியாகி உள்ளது. அதன் விவரம் வருமாறு:–

இலங்கையின் ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு சீன உளவு கப்பலான யுவான் வாங் 5 கடந்த வாரம் வந்தது. இந்த கப்பல் கடந்த 22 ஆம் திகதி இலங்கையில் இருந்து மீண்டும் புறப்பட்டுச் சென்றது.

இந்தக் கப்பல் இலங்கையில் நிறுத்தப்பட்டிருந்த போது தென்னிந்தியாவில் உள்ள முக்கிய இராணுவ நிலைகளின்ஈரகசியம் கசிந்து விடும் என்று கூறப்பட்டது. மேலும் தென்னிந்தியாவில் உள்ள அணு உலைகள், கடற்படை தளங்கள் போன்றவற்றின் செயல்பாடுகளையும், அதன் தகவல்களையும் சீன உளவுக் கப்பல் கண்டறிந்து விடும் என கூறப்பட்டது. இதனால் இந்திய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் எனவும் தகவல் வெளியானது.

இதையடுத்து இலங்கைக்கு வந்த சீன உளவு கப்பலை தடுத்து நிறுத்தாது ஏன்? என்ற கேள்வி அனைத்து தரப்பினராலும் எழுப்பபட்டது. இதையும்

ஆனால் இந்தக் கேள்விகள் எதையும் கண்டுகொள்ளாத இந்திய இராணுவம், உளவு பார்க்க வந்த சீன உளவு கப்பலை அங்குலம், அங்குலமாக உளவு பார்த்த தகவல் இப்போது வெளியாகி உள்ளது. இதனால்தான் இலங்கை ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் இருந்து சீன உளவு கப்பல் 22 ஆம் திகதியே புறப்பட்டு சென்று விட்டதாகவும் தெரியவந்துள்ளது.

இந்த சாதனையை இந்தியா எப்படி நிகழ்த்தியது என்ற விவரம் இப்போது வெளியாகி அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

இதற்கு காரணம் இந்திய இராணுவத்திற்காக அனுப்பபட்ட ‘ஜி சாட் 7’, ‘ஜி சாட் 7ஏ’ ஆகிய செயற்கைக் கோள்களே ஆகும்.

இந்த செயற்கைக்கோள்கள் இந்திய விமான படை மற்றும் கடற்படைக்காக ஏவப்பட்டவையாகும். இந்த செயற்கைக் கோள்கள் இந்திய வான் எல்லையில் அத்துமீறி நுழையும் விமானங்கள், டிரோன்கள், வான் வெளியில் நுழையும் மர்மப் பொருள்களைக் கண்காணிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன.

இவை தான் சீன உளவு கப்பல் இலங்கை துறைமுகம் வந்ததும் அதில் இருந்து வெளியாகும் அனைத்து சிக்னல்களையும் இடைமறித்துத் தடுத்ததோடு, உளவு பார்க்கும் வேலையையும் முறியடித்துள்ளன.



மேலும் சீன உளவு கப்பலை கண்காணிக்க ரிசாட், எமிசாட் உள்பட 4 செயற்கை கோள்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. எமிசாட் செயற்கை கோளில் இருந்து வெளியாகும் கெடில்லா மின்னணு நுண்ணறிவு தொகுப்பை பயன்படுத்தி இந்திய இராணுவம் சீன உளவு கப்பலில் இருந்து வெளியான அனைத்து சிக்னல்களையும் இடைமறித்து தடுத்துள்ளது. இதன்மூலம் இந்திய இராணுவம் தொடர்பான எந்த தகவலையும் சீன உளவு கப்பல் சேகரிக்க முடியாத நிலை ஏற்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது.

'கம்பவாரிதி' இலங்கை ஜெயராஜ் தமது 'உகரம்' இணையத்தளத்தில் 'பாட்டும் நானே! பாவமும் நானே!' என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி 'காலைக்கதிர்' நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்குத் தீனியாகிறது.

# பாட்டும் நானே? பாவமும் நானே!




**1. கேள்வி:-** கம்பன்கழகத்தின் விழாக்களை மீண்டும் தொடங்கும் எண்ணம் இல்லையா?

**பதில்:-** நாட்டுச் சூழ்நிலையால் இதுவரை அந்த எண்ணம் இல்லாமலிருந்தது உண்மைதான். நல்லூர் முருகனின் திருவிழாவைப் பார்த்த பின்பு, இப்போது அந்த எண்ணம் வந்துவிட்டது. தமிழ் கடவுளைக் காணவந்த கூட்டத்தைப் பார்த்த பிறகு, தமிழைக் காணவும் வழமையான கூட்டம் வரும் என்ற நம்பிக்கை பிறந்துவிட்டது. கழகம் கடந்துவந்த, கடந்த 40 ஆண்டுகளில் இப்படி இடையிடையே ஓரிரண்டு ஆண்டுகள் விழாக்கள் தடைப்பட்டதுண்டு. அத்தடைகளுக்குப் பிறகு நடந்த விழாக்கள், முன்னைய விழாக்களை விட மிகச் சிறப்பாக அமைந்தன. இம்முறையும் அப்படி நடக்கவேண்டும் என்று இறைவனைப் பிரார்த்தித்தபடி இருக்கிறோம். உங்களைப் போன்ற தமிழ் இரசிகர்களின் ஆர்வத்தால் அப்படியே நடக்கும் என்றும் நம்புகிறோம்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ கம்பன் புகழ் வாழ்க! கன்னித்தமிழ் வாழ்க!**

**2. கேள்வி:-** தமிழ்நாட்டு அரசியல்வாதிகளுக்கும் நமது தமிழ் அரசியல்வாதிகளுக்கும் இடையே உள்ள வித்தியாசம்?

**பதில்:-** இக் கேள்விக்கு நான் எழுதப்போகும் பதிலை வைத்து, தயை கூர்ந்து என்னை ஒரு புகழ் விரும்பி எனத் தவறாக எடைபோட்டு விடாதீர்கள் என்ற முன்னுரையோடு இக்கேள்விக்கான பதிலை எழுதத் தொடங்குகிறேன்.

ஒருமுறை கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் முத



லமைச்சராய் இருந்தபோது, அவரது கவிதை நூல் ஒன்றின் வெளியீட்டுவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றினேன். அன்றுதான் எனது பேச்சை முதல் முறையாக அவர் கேட்டார். என்மேல் பற்றுதலும் மதிப்பும் கொண்ட முன்னைய மத்திய இணை அமைச்சர் ஜெகத்ரட்சகன் அவர்கள் என்னைப்பற்றி கலைஞரிடம் ஏற்கனவே சொல்லியிருப்பார் போல. அதனால் கலைஞர் அவர்கள் என் பேச்சைக் கூர்ந்து கேட்டார். என் குசும்பு விடுமா என்ன? இறைநம்பிக்கை இல்லாதவர்களின் கூட்டம் அது என்று தெரிந்து கொண்டும், வேண்டும் என்றே திருஞானசம்பந்தரின் ஒரு தேவாரத்தை வைத்தே என் பேச்சை ஆரம்பித்தேன். பலருக்கும் அது ஆச்சரியமாய் இருந்தது. ஆன்மீகவாதிகள் மகிழ்ந்து போனார்கள்.

பேச்சை முடிக்கும் போது, மரபின்படி கலைஞரைப் புகழ்வதற்காக, அங்கு ஒரு சிறுகதையைச் சொன்னேன். தங்கம் பிரம்மனிடம் சென்று இவ்வளவு உயர்வாக என்னைப் படைத்துவிட்டு, ஒன்றுமே இல்லாத குண்டுமணியை வைத்து என்னை நிறுக்கச் செய்து விட்டாயே என்பதான அக்கதையைச் சொல்லி, அவர் தங்கம், நான் வெறும் குண்டுமணி (எனது உடம்பைக் காட்டி) அப்படியிருக்க அவர் கவிதையை நான் நிறுத்ததை அவர் தவறாக நினைக்கக்கூடாது என்று சொல்லி எனது பேச்சை முடித்தேன். சபை ஆரவாரித்தது.

எனக்குப் பின் வேறு இரண்டு, மூன்று பேச்சாளர்கள் பேசினார்கள். நிறைவாகக் கலைஞர் பதிலுரை அளித்தார். அந்தப் பதிலுரையில் இரண்டு, மூன்று தரமாக அவர் எனது பெயரைக் குறிப்பிட்டார். அது மட்டுமல்லாமல் தனது கெட்டித்தனத்தையும் அவர் அங்கு பதிவு செய்தார். நான் என்னை ஆன்மீகவாதியாய்க் காட்டிப் பிறகு என்னைக் குண்டுமணியோடு ஒப்பிட்டேன். அதை வைத்துக் கொண்டு அவர் 'ஜெயராஜ் தன்னைக் குண்டுமணி என்றார். அதிலிருந்து அவர் எங்கள் அணி சார்ந்தவர் என்பதைத் தெரிந்து கொண்டேன்' என்றார். எனக்கும் சபைக்கும் ஒன்றும் புரியவில்லை. ஒரு நிமிட இடைவெளி விட்டபிறகு, 'கறுப்பும் சிவப்பும் கலந்ததுதானே குண்டுமணி. அதனால்தான் அப்படிச் சொன்னேன்' என்றார். அவர்களது தி.மு.கழகத்தினது கொடியின் நிறம் கறுப்பும், சிவப்பும் என்பதை வைத்துத்தான் அவர் அப்படிச் சொல்கிறார் என்பது விளங்கியவுடன், சபையில் பெரும் ஆரவாரம் கிளம்பியது.

நான் சொல்லவந்த விடயம் இதுவல்ல. இந்தப் பேச்சு முடிந்ததும் விமானத்தைப் பிடிப்பதற்காக நான் இடையில் கிளம்பவேண்டியிருந்தது. விழா அமைப்பாளர்கள் என்னை ஒரு வண்டியில் ஏற்றி அனுப்ப ஆயத்தம் செய்தார்கள். அப்போது அவர்களது கட்சியைச் சேர்ந்த ஓர் அன்பர் ஓடி வந்து நானும் அவரை வழியனுப்ப வருகிறேன் என்று சொல்லி என்னோடு ஏறிக் கொண்டார்.

அவர் எனது பெரிய ரசிகராய் இருந்தார். என்னோடு பேசத் தொடங்கிய அவர் "சார் கலைஞர் இன்னைக்கி இரண்டு மூணு தரம் உங்க பேரை மேடையில சொல்லிட்டார். அவர் திட்டமிடாமல் அப்படி யார் பேரையும் சொல்லமாட்டார். உங்களை ரொம்பப் பிடித்ததால் தான் அப்படி சொல்லியிருக்கிறார். அதனாலே நீங்க கேட்டா இரண்டு, ணு 'மெடிக்கல் சீற்' கொடுப்பார் சார். நீங்க அதைக் கேட்டுவாங்கி நம்ம ஈழத்துப் பையங்களுக்கு கொடுத்து உதவி பண்ணுங்க சார்." - என்றார் அப்பாவியாக. எனக்கு ஆச்சரியமாக இருந்தது. தனக்குப் பிடித்தவர்களை கலைஞர் எப்படி வளர்த்துவிடுகிறார் என்கின்ற உண்மையை மட்டும் அவர் பேசியதிலிருந்து நான் தெரிந்து கொண்டேன்.

ஓரிரண்டு ஆண்டுகள் கழித்து, நாங்கள் கொழும்பில் நடத்திய கம்பன் விழாவுக்காக கலைஞரின் நெருங்கிய நண்பரும் பெரும் தமிழறிஞருமான சிலம்பொலி செல்லப்பன் அவர்கள் வந்திருந்தார். இரண்டாம் நாள் விழா முடிந்த போது என்னை அருகில் அழைத்த சிலம்பொலி அவர்கள் 'நான் இன்றிரவே சென்னை செல்லவேண்டும் என்று' கேட்டுக் கொண்டார். முழுநாளும் நிற்கச் சம்மதித்து வந்த அவர், ஏன் அப்படிக் கேட்கிறார் என்று புரியவில்லை. நான் காரணத்தைக் கேட்டபோது, 'நாளை கலைஞரின் பிறந்தநாள் விழா. அது இப்போதுதான் நினைவுக்கு வந்தது. அதனால்தான் இப்படிக் கேட்கிறேன்' என்றார். 'விழா முடிந்த பிறகு நீங்கள் சென்று வாழ்த்தக்கூடாதா?' என்று கேட்டேன். அப்போது இரகசியமாக என்னை அழைத்து ஒரு செய்தியை அவர் சொன்னார்.

'உங்களுக்குக் கலைஞரைத் தெரியாது. அவர் எல்லாவற்றையும் கூர்ந்து கவனிப்பார். தனது விழாவுக்கு யார் யார் வந்தார்கள், யார் யார் வரவில்லை என்பதைக் குறிப்பெடுத்துக் கொள்வார். பின்னர் வந்தவர்களுக்கு ஏதாவது சலுகை செய்வார். வராதவர்களை ஏதாவது விதத்தில் தண்டிப்பார்' என்றார். எனக்கு மீண்டும் ஆச்சரியமாக இருந்தது. தன்னைக் கனம் பண்ணாதவர்களைக் கலைஞர் தண்டித்து எப்படித் தன்கைக்குள் வைத்துக் கொள்கிறார் என்கின்ற உண்மையை அன்று தெரிந்து கொண்டேன்.

உண்மையில் கலைஞரின் இவ் ஆற்றல்களைத் தெரிந்து நான் வியந்து போனேன். அந்தப் பெரிய கட்சியில் அக்கறையுள்ள தன் ஆதரவாளர்களைத் தெரிந்து வளர்க்கவும், அக்கறையில்லாத ஆதரவாளர்களைத் தெரிந்து தண்டித்துத் தன் பக்கம் ஈர்க்கவும் தெரிந்ததால்தான் பலதரம் ஆட்சி அமைக்கமுடியாமல் போன போதும் தனது கட்சியை அவரால் ஸ்திரமாக வைத்திருக்க முடிந்தது என்ற உண்மை எனக்குத் தெரிய வந்தது.

இனி உங்கள் கேள்விக்கான பதிலுக்கு வருகிறேன். எங்களுடைய தற்போதைய தமிழ்த் தலைவர்களுக்குத் தங்கள மீதான அக்கறையுள்ள ஆதரவாளர்களை வளர்க்கவும் தெரியவில்லை. அக்கறையில்லாத ஆதரவாளர்களைக் கண்டித்து தம் பக்கம் இழுக்கவும் தெரியவில்லை. நாடாளுமன்றக் கூட்டுக்குள் குந்தியிருந்து குஞ்சுபொரிப்பதே தங்கள் வேலை என்று இவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஈழத்துப் பெருங்கவிஞர் மஹாகவி, தனது 'அகலிகை', என்ற கவிதையில் கௌதம முனிவர் பற்றி எழுதுகையில் தம் தொழில் பிறிதென்பார்ப்போல் தாடியை வருடி மீண்டார் என்று எழுதுவார். அப்படித்தான் நம் தலைவர்களும் இருக்கிறார்கள். கட்சி வளர்ப்பது பற்றி இவர்கள் தமிழ்நாடு சென்று 'ரெயினிங்' எடுக்கவேண்டும்.

அதிகம் ஏன்? என் அனுபவத்தையே சொல்கிறேனே! இவ்வளவு நாள் இந்தக் 'கேள்வி பதில்' பகுதியில் பல தலைவர்களை நான் கண்டித்தும் பாராட்டியும் எழுதியிருக்கிறேன். பாராட்டப்பட்ட தலைவர்கள் ஒருவார்த்தைக்குத் தானும், அப்பாராட்டுக்காக எனக்கு நன்றி சொன்னதில்லை. கண்டிக்கப்பட்ட தலைவர்கள் என்னை ஈர்த்து தங்களுக்குச் சார்பாக்க முயன்றதும் இல்லை. இவர்கள் இந்த உலகத்தில் இல்லை என்பதற்கு இதுவே சாட்சி. இதைச் சொன்னவுடனே தாங்கள் ஏதோ பற்றில்லாதவர்கள் என்பது போலப் பேச முனைவார்கள். அதெல்லாம் வெறும் பொய்! இவர்களுக்கு அரசியல் நடத்தத் தெரியவில்லை என்பது தான் உண்மை. இது அவர்களின் விதிப்பிழை இல்லை. தமிழினத்தின் விதிப்பிழை. அவ்வளவுதான்!

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ தாங்கள் வளர்ந்தால் போதாதா? கட்சியை ஏன் வளர்க்கவேண்டும்? ஹி.. ஹி..**

**3. கேள்வி:-** இந்த சில நாள் ஆட்சியை வைத்து, புதிய ஜனாதிபதி ரணிலின் ஆட்சிக்கு 'பாஸ் மாக்ஸ்' வழங்குவீர்களா? அல்லது 'பெயில் மாக்ஸ்' வழங்குவீர்களா?

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)



# நாட்டில் மனித உரிமைகள் மீறப்படுகின்றன பஹியங்கல ஆனந்த சாகர தேரர் குற்றச்சாட்டு

நாட்டில் வெளிப்படையாகவே மனித உரிமைகள் மீறப்படுகின்றன என பஹியங்கல ஆனந்த சாகர தேரர் குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் பிழையான பொருளாதார மூலோபாயங்களை எதிர்த்து முன்னெடுக்கப்படும் போராட்டங்



களை எவ்வாறு பயங்கரவாதமாக அடையாளப்படுத்த முடியும் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

பயங்கரவாத குற்றச்சாட்டுகள் தொடர்பில் அரசாங்கம் உரிய முறையில் பதிலளிக்க வேண்டுமென தெரிவித்துள்ளார்.

அத்துடன் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 15 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகள் நடைபெறவுள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கத்தின் பிழையான கொள்கைகளாலும், மனித உரிமை மீறல்களாலும் நாட்டுக்கு பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டால் அதற்கான பொறுப்பை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷவும், அவர்களைச் சுற்றியிருப்பவர்களும் பொறுப்பு ஏற்க வேண்டு எனத் தெரிவித்துள்ளார்.

# பல்கலைகளில் இரவுகளில் கஞ்சா புகைக்கின்றார்கள்!

## எஸ்.பி.திஸாநாயக்க சாடல்



உயர் கல்வி அமைச்சராக தான் கடமையாற்றிய போது, பல்கலைக்கழகங்களுக்குள் இருந்த பயங்கரவாதத்துக்கு பயங்கரவாதம் மூலம் பதிலளித்ததாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

1967 ஆம் ஆண்டுக்கு பின்னர் கல்வியமைச்சர் ஒருவர் பல்கலைக்கழங்களுக்குச் சென்றதில்லை. அரச தலைவரும் சென்றதில்லை. ஆனால், நான் அனைத்து பல்கலைக்கழகங்களுக்கும் சென்றேன். முதல் முறை சென்று சண்டையிட்டேன். அதனை நான் எதிர்கொண்டேன்.

அதன் பின்னர் அன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அனைத்து பல்கலைக்கழங்களுக்கும் அழைத்துச்சென்றேன். பல்கலைக்கழகங்களின் நிலைமையை முற்றாக மாற்றினேன்.

பல்கலைக்கழகங்களுக்கு வெளிநாட்டு மாணவர்களைக் கொண்டு வந்தோம். எனினும் மீண்டும் பல்கலைக்கழகங்களில் பழைய நிலைமை ஏற்பட்டுள்ளது.

அனைத்து பல்கலைக்கழங்களிலும் 300 முதல் 400 பேர் இரவு நேரங்களில் தங்கி இருந்து கஞ்சா புகைத்து, கசிப்பு போன்றவற்றை பயன்படுத்தி பலவந்தமாக உள்ளே இருக்கின்றனர்.

பல்கலைக்கழங்களின் நிர்வாகிகள் அமைதியாக வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கின்றனர். உயர் கல்வியைக் கட்டியெழுப்புவதற்கு காலம் தேவைப்படுகிறது எனவும் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

# கொரோனா பரிசோதனைகளை முறையாக மேற்கொண்டால் நாளாந்த தொற்றாளர் எண்ணிக்கை ஆயிரத்தைத் தாண்டும்!

## எச்சரிக்கிறார் உபுள் றோஹண

பரிசோதனைகள் முறையாக மேற்கொள்ளப்பட்டால், நாளாந்தம் கொரோனா தொற்று உறுதி செய்யப்படுபவர்கள் எண்ணிக்கை ஆயிரத்தை தாண்டும் என பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

புதிய ஒமிக்ரோன் திரிவு குறிப்பிடத்தக்க அளவில் பரவியுள்ளதால், பூஸ்டர் டோஸ்களை விரைவில் பெற்றுக்கொள்ளுமாறும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கதின் தலைவர் உபுல் றோஹன பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டார்.

இந்த நோய் சிறுவர்கள் மத்தியில் மிக வேகமாக பரவி வருவதாக தெரிவித்த அவர், சிறிய அறிகுறி தென்பட்டால், அவர்களை வீட்டில் தனிமைப்படுத்துமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை, நோயாளர்களை தங்க வைப்பதற்கான தனிமைப்படுத்தப்பட்ட நிலையங்கள் எதுவும் தற்போது இயங்கவில்லை என சுகாதார சேவைகள் பிரதிப்



பணிப்பாளர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், பெரும்பாலானவர்கள் தடுப்பூசியை செலுத்தியிருப்பதால் அவர்கள் வீட்டிலேயே தம்மைத் தாமே தனிமைப்படுத்திக்கொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா நோயாளர்களுக்கான தனிமைப்படுத்தல் நிலையங்கள் இயங்காவிட்டாலும், மற்றுமொரு தொற்று நோய் ஏற்பட்டால், அதற்காக நிலையங்கள் திறக்கப்படும் என ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

# கொழும்பில் 40 கோடி ரூபா செலவில் ராஜபக்ஷவினர் கொள்வனவு செய்த வீடு!



ராஜபக்ஷ குடும்பத்தினர் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கொழும்பு - கிரிமண்டல மாவத்தையில் 40 கோடி ரூபா பெறுமதியான காணி மற்றும் வீடு ஒன்றைக் கொள்வனவு செய்துள்ளனர் என இலங்கை சட்டத்தரணிகள் சங்க முன்னாள் தலைவர் உபுல் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின்போது கருத்துரைக்கும் போதே இந்தத் தகவல்களை அவர் வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் பில்லியன் கணக்கில் ராஜபக்ஷவினர் சொத்துக்களை சேகரித்துள்ளனர். இவர்கள் மீது இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்காதமைக்கான காரணம் என்ன என்றும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

நாடு நெருக்கடியில் சிக்கியுள்ள வேளையில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் 40 கோடி ரூபா பெறுமதியான வீட்டைக் கொள்வனவு செய்துள்ளனர். அந்தக் குற்றங்களுக்காக அனைத்து ராஜபக்ஷக்களும் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும்.

நாட்டில் இதுவரை பல பில்லியன் கணக்கில் சொத்துக்களை சேகரித்தமை மற்றும் சட்டவிரோத செயல்களில் ராஜபக்ஷவினர் தொடர்ச்சியாக ஈடுபட்டுள்ளனர்.

மலேசியாவின் முன்னாள் பிரதமர் ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக கைது செய்யப்பட்டதை போன்று இலங்கையில் தவறான முறையில் சொத்துக்களைக் குவித்த ராஜபக்ஷ குடும்பத்தின் கோட்டாபய, மஹிந்த, பஸில், நாமல் உட்பட அனைத்து ராஜபக்ஷக்களும் கைது செய்யப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும், காலி முகத்திடலில் அமைதியான முறையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் மே 9 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுக்கு பொலிஸ் அதிகாரி தேசபந்து தென்னகோன் பொறுப்புக் கூற வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

போராட்டக்காரர்கள் எவருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படாது என்று உறுதியளித்த தேசபந்து தென்னகோன், பின்னர் அமைதி ஆர்ப்பாட்டம் மீது தாக்குதல் நடத்த அனுமதித்தமை முற்றிலும் தவறாவன விடயம் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். ராஜபக்ஷ ஆதரவாளர்களை முதலில் 'மைனா கோகம' மீது தாக்க அனுமதித்தவரும், பின்னர் காலி முகத்திடலின் பிரதான போராட்ட தளத்தை நோக்கி அவர்களை செல்ல அனுமதித்தவரும் தென்னகோன் என்றும் தெரிவித்துள்ளார்.

# பாட்டும் நானே? ....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

**பதில்:-** * வீதிவீதியாக 'காஸ் சிலிண்டர்'களை வைத்துக் கொண்டு மக்கள் பட்ட கஷ்டத்தை ஓரளவு தீர்த்து விட்டார்.

* நாள் கணக்கில் பெற்றோலுக்காகவும் டீசலுக்காகவும் தவம் கிடந்த சூழ்நிலையை மாற்றி 'கியூ' யுகத்தை ஓரளவு நிறுத்திவிட்டார்.

* மேற்சொன்ன இரண்டினாலும் அரசுக்கு எதிரான பொதுமக்களின் போராட்ட உணர்வை தவிர்த்துவிட்டார்.

* மிரட்டியும் ஈர்த்தும் போராட்டக்காரர்களை ஓரளவு ஓயச் செய்துவிட்டார்.

* அதிகாரம் செய்ய நினைக்கும் வெளிநாட்டுச் சக்திகளைச் சற்று நிமிர்வோடு கையாளப் பழகிவிட்டார்.

* அரசியல் கட்சிகளை ஈர்த்து, 'சர்வகட்சி ஆட்சியை' அமைக்கத் தன்னாலான அளவு முயற்சிக்கிறார்.

- இவற்றையெல்லாம் பார்த்தால், அவரது ஆட்சிக்கு வெறும் 'பாஸ்' அல்ல, 'கிரடிற் பாஸே' கொடுக்கலாம் போல்த்தெரிகிறது. இனப்பிரச்சினையையும் தீர்த்து, நாட்டைக் கடன்களிலிருந்தும் மீட்டுவிட்டாரானால், 'டிஸ்ரிங்ஷன் பாஸ்'க்கும் உரியவராகிவிடுவார். இது நாள் வரைக்கும் அவரை குள்ளப் புத்திக்காரன் என்று பலரும் சொன்னார்கள். இவற்றையெல்லாம் செய்து முடித்தால், நல்ல புத்திக்காரன் என நாட்டு மக்களால் பாராட்டப்படுவார். காலம் தான் அவரது ஆற்றலை முடிவு செய்யவேண்டும்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * வாரிதியார் அவசரப்பட்டு பாராட்டுகிறாரோ?....**

# ஐரோப்பிய ஒன்றியம், ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவில் இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் முறைப்பாடு!

## மே - 9 வன்முறைகள் தொடர்பாக

அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளது.

மே 9ஆம் திகதி நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பஸ்கள் எரிக்கப்பட்டமை தொடர்பிலேயே இவ்வாறு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த சம்பவங்கள் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயங்கள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 104**

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## அரசியல் கட்டமைப்புகள்

கட்சிகளாக, இயக்கங்களாகத் தமிழ் மக்கள் கூறுபட்டே செயல்பட்டு வந்திருக்கிறார்கள். அந்த வேற்றுமைகளை இன்று வரைக்கும் கடைப்பிடித்து, அதில் லாபம் கண்டு, மேலெழக் கூடிய ஏணிகள் இடித்து வீழ்த்தப்பட்டே வந்துள்ளன.

ஆனால் பேரினவாதம் தன் தரப்பில் எவ்வளவுதான் அதிகாரப் போட்டிகளில், அரசியல் கட்சிகள் எனத் தங்களிடையே பிளவு பட்டிருந்தாலும், பேரினவாத நிலைப்பாடு என்பதிலும், தமிழரது கோரிக்கை விடயங்களைக் கையாள்வதிலும் அவர்கள் கைகோர்த்துத்தான் பயணித்தார்கள்; பயணிக்கின்றார்கள். இப்பொழுதும் காலி முகத்திடல் யதார்த்தங்களிலும் அதைத்தான் காணக்கூடியதாக இருக்கிறது.

அரசியல் நெருக்கடிகளினால் – சர்வதேச நெருக்குவாரங்களினால் – வேறு வழியின்றி எதுவும் செய்வதற்கான ஆயத்தங்கள் தொடங்கும் போதும், மறுபுறத்தில் 'பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுவது போல' பேரினவாதத் தரப்புகளை அரசுக்கு ஆதரவாகப் பாவனை காட்டி, உண்மையில் அவற்றுக்கு எதிராக இயங்க வைத்து, பொங்கி வரும் பானையைக் கடைசியில் அவர்களது கூத்துக்களால் நீரூற்றி அடக்கி விடுவர்.

இவை எல்லாமே, பெரும்பான்மையான மக்களின் ஆதரவின்றி இவற்றை நடத்துவது முடியாது என்ற பெட்டிகளில் கடைசியில் அடங்கிவிடும்.

காலி முகத்திடல் போராளிகள் தற்சமயம் வேட்டையாடப்படுகிறார்கள். அவற்றின் பின்னணிகளில் நின்றவர்கள் அமைதியாகக் காலம் பார்த்துக் காத்திருக்கிறார்கள். அந்தக் காலங்கள் வரும்போது அவர்கள் புதுக் கட்சிகளை ஆரம்பித்து, மக்களிடையே போனாலென்ன, இருக்கின்ற கட்சிகளுடன் சேர்ந்து பயணித்தாலென்ன, தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களோ, வடக்கு, கிழக்கு இணைந்த அதிகாரக் கட்டமைப்போ ஏற்றுக் கொள்ளப்படப் போவதில்லை.

ஒரு நாட்டுக்குள் பேதங்கள் காட்டப்படாத சமுதாயத்திற்கான அதிகார மாற்றங்கள் பற்றி மட்டும் தான் பேசப்படும். இவ்வளவு காலங்களும் நடத்தப்பட்ட அரசியலால் அவர்கள் இணக்கப் பாதைகளில் அங்குதான் நிற்கிறார்கள். அப்படி என்றால் அந்தப் பாதைகள் அவர்களை எங்கு கொண்டு செல்லப் போகின்றன – இந்த பேரினவாதத்தின் பின்னணிகளில்?

காலங்காலமாக நடந்ததமை போல தனது பொருளாதாரத் திட்ட தேவைகளுக்காக புலம்பெயர் மக்கள் மீதும், அவர்களின் அமைப்புகளின் மீதும், விதிக்கப்பட்டதடைகளை நீக்க (அதுவும் பொதுவாக அல்ல) மறுபுறம் பெரும்பான்மையின் முகவர்கள், ரணிலின் நண்பர்கள், பேரினவாத தூண்கள் – அதனால் நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்து வரும் என்ற கோஷங்களை எழுப்பத் தொடங்கி விட்டனர்.

தமிழ் மக்களிடையே இருந்த பெருச்சாளிகள், மஹிந்த காலத்தில் இருந்து அவரது ஆதரவில் உழைத்தவர்கள், கறுப்பை வெள்ளையாக்குவதற்கு திட்டங்களுடன் உலா வருகிறார்கள். அவர்கள் முதலீடு செய்ய அனுமதிகள் பெறுவது முக்கியமாக சிங்களப் பகுதிகளிலேயே. தமிழ்ப் பகுதியில் முதலீடு செய்யும் நோக்கில் உப்பளத்தை வளப்படுத்தக் கேட்ட அனுமதியே பார்க்கப்படாமல் கிடப்பில் கிடக்கிறது.

அதற்கிடையில் சில புலம்பெயர் அரசியல் அமைப்புகள் தாங்கள் இணக்கச் செயற்பாடுகளை முன்னெடுக்கத் தயார் என்று அறிவிப்புகள் தருகின்றன. வருந்திக் கூட்டி, தங்கள் இணக்கத்தில் தமிழ் மக்களின் அரசியல் கோங்களை நாடு எதிர்கொள்ளும் பொருளாதார நிலையில் தூக்கி நிறுத்துவோம் என்கின்றனர். ரணிலோ எந்த ஒரு தீரவுத் திட்டத்தையும் இதுவரை முன் வைக்கவில்லை. அவரது குறி தன்னைத் திடப்படுத்துவதும், பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள முயல்வதும், செப்டெம்பரில் வரவிருக்கின்ற ஐ.நா. மனித உரிமைக கவுன்ஸில் கூட்டத்தை எதிர்கொண்டு சமாளிப்பது பற்றிய செயற்பாடுகள்தான்.

### தேசக் கட்டமைப்பு


ரணில்

ஒரு குறிப்பிட்ட பிரதேசமும், மக்களும், மொழியும், கலாசாரமும், அவற்றின் இடையே பின்னிப் பிணைந்த வாழ்வு முறைகளும், பாரம்பரியங்களும், வாழ்வாதாரங்களும், அவற்றுடன் கூடிய பொருளாதார தன்னிறைவும் ஒரு தேசத்தை அடையாளப்படுத்தத் தேவை.

இவற்றைச் சிறிது சிறிதாக வெளி யேற்றங்களால், நாமே சுய தெரிவுகளாலோ, நிர்பந்தங்களாலோ விட்டுக் கொடுத்தால் அந்த அடையாளங்கள் அழிந்து கொண்டு போகும். ஒன்றைத் தன்னோடு தக்க வைத்து அனுபவிப்பது அதற்கான சொத்தில் உரிமை கோரலுக்கு 90 வீதம் வலுச் சேர்க்கும் (Posse - ssion is 90 percent evidence to legal ownership) எனச் சட்டம் சொல்கிறது.

இப்படியே சென்று கொண்டு போனால் இருப்பு என்பது தமிழ் மக்களுக்கும் பலஸ்தீனியர்கள் போல இன்னும் போராட்டமாகவே மாறும்.

இரண்டாவது மகாயுத்தத்தின் முடிவில் வெற்றி பெற்ற இங்கிலாந்து, அமெரிக்கா, மற்றும் ஐரோப்பிய நாடுகள் பாலஸ்தீனப் பிரதேசத்தைக் கூறு போட்டு, அதில் ஒரு துண்டுப் பகுதியை இஸ்ரேலாக ஆக்கிய போது பாலஸ்தீனியர்களின் அரசியல் தங்கள் இருப்பிடத்திலும் பார்க்க இஸ்ரேல் தங்களிடையே அமையக் கூடாது எனத் தங்களது அரசியலை முன்னெடுத்தார்கள். இஸ்ரேலும் மாறல்ல. அவர்களோ தங்களுக்குத் தரப்படும் பிரதேசம் தங்களது பாரம்பரியமான நாடான இஸ்ரேலின் பத்து வீதப் பிரதேசம் கூட இல்லை எனத் தெரிவித்து அவர்களின் தீவிரவாதக் கட்டமைப்புகள் அதனை எதிர்த்தன. பாலஸ்தீனத்தைச் சுற்றி முப்பதுக்கும் மேற்பட்ட அரபு நாடுகள் சூழ்ந்து இருந்து அவை யாவும் தாம் இஸ்ரேலை அடித்து விரட்டுவோம் என்று தான் சபதம் போட்டார்கள். பின்னர் யதார்த்தத்தின் அடிப்படையிலும் அமெரிக்காவின் நட்புறவிலும் கொடுக்கப்பட்ட பகுதியை ஏற்று தங்களது பாரம்பரிய பிரதேசங்களுக்கு உரிய உரிமை விட்டுக் கொடுக்காது சிறிய நாடாக இஸ்ரேல் தனது வாழ்க்கையைத் தொடங்கி, ஏழு நாள் யுத்தத்தில் எகிப்து, சிரியா, லெபனான் நாடுகளுடனான போரில் ஏகப்பட்ட தனது நிலப் பிரதேசங்களை கைப்பற்றி அவற்றை ஆட்சி செய்கிறது.

புவியியல் அரசியலில் பலஸ்தீனம் தனது பிரதேசத்திற்கு இன்றும் போராடிக் கொண்டிருக்கின்றது. அது தனி நாடான அங்கத்துவத்துடன் ஐ.நாவால் அங்கீகரிக்கப்படவில்லை.

இதே போல ஈரான், ஈராக், சிரியா, லெபனான் பகுதிகளில் வாழும் குர்தீஷ் மக்கள் குழுமங்களாக வாழ்ந்தாலும் தங்களுக்கான கட்டமைக்கப்பட்ட தேசியத்துக்கும் இறைமைக்கும் இன்னமும் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

மக்கள் பாரம்பரியத்திலும் மேலாக, நிர்ப்பந்தங்களினால், தங்களது பிரதேசங்களை விட்டு வெளியேறி இருந்தாலும், இன்றைய சர்வதேச சட்டங்களின் அடிப்படையில், அதன் வளர்ச்சிகளில், தாங்கள் ஒரு தேசமாக எவ்வழிகளில், எங்கெங்கு பரந்து வாழ்ந்தாலும் ஒரு தேசமாக வாழ வேண்டும் என்ற உள்ளக் கிடக்கைகளை விட்டுக் கொடுக்கவில்லை. அது அழிந்து போகவில்லை என்பதைத் திடப்படுத்துகிறார்கள் என்பது வீரமந்திரிக்குப் பதிலாகச் சொல்லப்பட்டது.




மத்திய கிழக்கில் சின்னஞ் சிறிய இஸ்ரேல்

எல்லைகள் எவை, பகுதிகள் எவை என்பதிலும் பார்க்க அவர்கள் தேசமாக வாழ வேண்டும் என்ற உறுதிதான் முக்கியம். புராணங்கள், சரித்திரத்தை விடுங்கள். 1948 இல் இலங்கை சுதந்திரம் அடைந்தபோது வடக்கு, கிழக்கில் இருந்த மக்களின் வீதாசாரத்தை கணக்கெடுத்தால், அதில் தமிழ் மக்கள் பெரும்பான்மை, அது படிப்படியாக குடியேற்றங்களால் பறிக்கப்பட்டமையும் தெரியும். அது அவர்களது பாரம்பரிய பிரதேசங்கள் என்பது சுட்டிக்காட்டப்பட்டது. ஆனால் அவற்றைப் பலப்படுத்த கட்டமைப்புக்கள், சிங்கள மக்களின் பிரசாரத்திற்கும் இராணுவ ஆக்கிரமிப்புகளுக்கு எதிராகவும் இயங்கவில்லை. புலம்பெயர்ந்த மக்கள் இன்னும் குழுமங்களாக (முக்கியமாக தமிழ் நாட்டில் கூட) அனேகமாக அகதிகளாக உழன்று கொண்டிருக்கின்றார்கள். நாட்டிற்கு, தங்கள் பிரதேசத்திற்கு போக வேண்டும் என்ற ஓர்மத்தைக் காட்டுவதில்லை. அதுவே வேதனைக்குரியது.

(வளரும்....)

காலத்துக்குக் காலம் இஸரேலிடம் பிரதேசத்தை இழந்த பாலஸ்தீனம்



காலைக்கதிர்
Kalaikkathir

# சுற்றாடல் அமைச்சர் நஷீரின் நடவடிக்கையால் மணல் மாபியாக்களின் அலுவலகம் முற்றுகை!



சுற்றாடல் அமைச்சர் ஹாபிஸ் நஷீர் அஹமட்டின் அதிரடி நடவடிக்கையையடுத்து சட்டவிரோதமாக நீண்ட காலமாகத் செயற்பட்டு வந்த மணல் மாபியாக்களின் அலுவலகம் ஒன்று முற்றுகையிடப்பட்டுள்ளது.

அமைச்சின் அதிகாரிகள் மற்றும் புவியியல் சேவை மற்றும் நில அகழ்வுப் பணியக புலனாய்வு அதிகாரிகள் ஆகியோருக்கு அமைச்சர் விடுத்த பணிப்புரைக்கமைய இரண்டு கிழமைக்குள் இந்த அதிரடி சுற்றிவளைப்பு இடம்பெற்றுள்ளது.

இதுபற்றி சுற்றாடல் அமைச்சர் நஷீர் அஹமட் தெரிவித்தவை வருமாறு -

புவியியல் சேவை மற்றும் நில அகழ்வுப் பணியகத்தின் அரச இலட்சினையை போலியாகப் பயன்படுத்தி, மணல் வியாபாரம் மற்றும் நில அகழ்வுக்கு அனுமதி வழங்கிய இடமொன்று கைப்பற்றப்பட்டுள்ளது. இதனோடு தொடர்புடைய சிலரும் கைது செய்யப்பட்டனர். இங்கிருந்த இரண்டு டிப்பர்களையும் பொலிஸார் கைப்பற்றினர்.

இவை, சட்டவிரோதமாக மணலை ஏற்றிச்சென்றவை என நம்பப்படுகிறது. குருநாகல் போக்கரல்லயில் இந்தப் போலி இடம் கடந்த ஐந்து வருடங்களாகச் செயற்பட்டுள்ளது.

அமைச்சின் புலனாய்வுப்பிரிவினர் நடத்திய சுற்றிவளைப்பில் இந்த இடம் கண்டுபிடிக்கப்பட்டது. இங்கிருந்து ஐந்நூறு அனுமதிப்பத்திரங்கள் (லைசன்ஸ்) நாளொன்றுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அரசாங்கத்தால் இரண்டாயிரம் ரூபா அறவிடப்படும் ஒரு லைசன்ஸுக்கு இவர்கள், தலா ஆறாயிரம் ரூபா வீதம் அறவிட்டுள்ளனர். இவ்வாறு சட்டவிரோதமாக நாளொன்றுக்கு முப்பது லட்சம் ரூபா அறவிடப்பட்டுள்ளது.

இந்த சட்டவிரோத செயற்பாடுகளை இயக்கி வந்த, இவர்களது அலுவலகம் குருநாகல் போக்கரல்ல என்ற இடத்தில் இயங்கி வந்துள்ளது.

பொலன்னறுவை வெலிக்கந்தயில் வைத்து சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற டிப்பர்கள் முதலில் கைப்பற்றப்பட்டுள்ளன. கைதானவர்களிடமிருந்து பெறப்படும் தகவலைத் தொடர்ந்து இதன் பின்னணியிலுள்ளோரை கைது செய்வது மற்றும் இதுபோன்ற வேறு இடங்கள் எங்காவது இயங்குகின்றனவா என்ற தகவல்கள் பெறப்படவுள்ளன எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அம்பாறையில் மக்கள் படையெடுப்பு!





அம்பாறை - கல்முனை, சாய்ந்தமருது மற்றும் மருதமுனை உள்ளிட்ட பகுதிகளில் எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு மீண்டும் மக்கள் முண்டியடிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

வியாழக்கிழமை இரவு முதல் பெற்றோலை பெறுவதற்கு மக்கள் எரிபொருள் நிலையங்களுக்கு வருகை தந்தவண்ணம் உள்ளனர் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த காலங்களில் கியூ.ஆர் அட்டை முறைமையால் சீராக மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் விநியோகம் திடீரென சிக்கல் நிலைமையை அடைந்ததையடுத்து இவ்வாறு மக்கள் முண்டியடிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை மக்கள் சில நாளாகளாக எரிபொருள் நிலையத்தை சூழ்ந்து நிற்பதையும், அதிகளவான வாகனங்கள் எரிபொருள் நிலையங்களை நாடிச் செல்வதையும் காண முடிவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் நாடளாவிய ரீதியில் மீண்டும் எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக செய்திகள் வெளிவந்த வண்ணம் உள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

# மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட நால்வர் கைது!

பொகவந்தலாவ பகுதியில் சீதா எலிய பிரதேசத்தில் சட்டவிரோதமாக மாணிக்ககல் அகழ்வில் ஈடுபட்ட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

சந்தேக நபர்கள் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சீதாஎலிய மற்றும் கொட்டியாகல பகுதியில் பொகவந்தலாவ பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் சட்டவிரோதமான முறையில் மாணிக்ககல் அகழ்வில் ஈடுபட்ட நால்வரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இதன்போது கைது செய்யப்பட்டவர்கள் 25, 32, 53 மற்றும் 66 வயதுடையவர்கள் எனவும் அவர்கள் பொகவந்தலாவ பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளார்கள். சந்தேகநபர்கள் ஹற்றன் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட உள்ளனர். சம்பவம் தொடர்பில் பொக வந்தலாவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளார்கள்.

# நல்லூர் தேர்த் திருவிழாவின் போது 30 பவுண் நகைகள் திருடப்பட்டன!

## சிறுவன் உட்பட ஐவர் கைது

நல்லூர் ஆலய தேர்த் திருவிழாவின் போது 30 பவுண் நகைகள் திருடப்பட்ட நிலையில் சந்தேகத்தின் போரில் சிறுவன் உட்பட ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நல்லூர் ஆலய வருடாந்திர தேர்த்திருவிழா கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற போது நாடளாவிய ரீதியில் இருந்தும் பல்லாயிரக் கணக்கானோர் கலந்து கொண்டனர்.

இதன்போது ஏற்பட்ட சுவட்ட நெரிசலை பயன்படுத்தி இரண்டு தாலிக் கொடிகள் உள்ளிட்ட சுமார் 30 பவுண் நகைகள் களவாடப்பட்டுள்ளன.

அத்தோடு பெண்ணொருவரின் சங்கிலியை அறுக்க முற்பட்ட வேளை நீர்கொழும்பு பகுதியை சேர்ந்த பெண்ணொருவர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் ஆலய சூழலில் திருட்டுக்களில் ஈடுபட்ட குற்றத்தில் கைது செய்யப்பட்ட சிறுவன் உட்பட குறித்த ஐவரையும் விசாரணை செய்துவருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# பண்டாரவன்னியனின் 219 ஆவது நினைவுநாள் முல்லைத்தீவு - கற்சிலைமடுவில் அனுஷ்டிப்பு!







வன்னி இராச்சியத்தின் இறுதி மன்னன் மாவீரன் பண்டாரவன்னியன் முல்லைத்தீவு கோட்டையை 1803 ஆம் ஆண்டு ஆங்கிலேய படைகளிடமிருந்து மீட்டு இரண்டு பீரங்கிகளைக் கைப்பற்றி வெற்றி கொண்ட 219 ஆவது ஆண்டு நாள் கடந்த வியாழக்கிழமை ஆகும்.

அதனடிப்படையில் மாமன்னன் மாவீரன் பண்டாரவன்னியனின் 219 ஆவது வெற்றி நினைவு நாள் நிகழ்வு கற்சிலைமடு பண்டாரவன்னியனின் உருவச்சிலை வளாகத்தில் வியாழக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

219 ஆவது விழாக் குழுவின் தலைவர் சி.நாகேந்திரராசா தலைமையில் இடம்பெற்ற வெற்றி நினைவு நாள் நிகழ்வின் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் கலந்து கொண்டிருந்தார்.

கற்சிலைமடுவில் உள்ள பண்டாரவன்னியனின் உருவச்சிலை வளாகத்திற்குள் உள்நுழையும் பிரதான வீதியின் வாயிலில் பெயர்ப்பலகையை நிகழ்வின் பிரதம விருந்தினரான முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் திரைநீக்கம் செய்து வைத்தமையைத் தொடர்ந்து மேற்படி நிகழ்வு ஆரம்பமானது.

தொடர்ந்து விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டு பண்டாரவன்னியனின் நினைவுத்தூபிக்கு முன்றிலில் மங்கள விளக்கேற்றலுடன், பண்டாரவன்னியன் வாள் கொடி பிரதம விருந்திரனால் ஏற்றப்பட்டு, கொடி கீதம் இசைக்கப்பட்டது.

கலந்து கொண்டிருந்த அதிதிகளால் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டதுடன், உருவப்படத்துக்கு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் சி.ஜெயக்காந்த், ஒட்டுசுட்டான் உதவி பிரதேச செயலாளர் இ.றமேஸ், ஒட்டுசுட்டான் பிரதேசசுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் க.சுதர்சன், துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் மாலதி முகுந்தன், முல்லைத்தீவு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ச.யசிந்தன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.08.2022இல் வெளியிடப்பெற்றது.